
**1.3** 2025 ஆம் ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த பொருளாதார மீளாய்வுக்கு இணங்க, 2025 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் தனிநபர் வருமானம் (per capita income):

(1) US $ 5,003. (2) US $ 4,516. (3) US $ 3,818. (4) US $ 3,464.

**1.4** பொருளாதாரம் ஒன்றின் பொருள்கள் $x$ மற்றும் $y$ இன் உற்பத்திச் சாத்திய வளையியை (PPC) பின்வரும் வரிப்படம் காட்டுகிறது:




பின்வரும் புள்ளிகளில் எது பொருளாதாரத்தின் முழு வேலையைக் (full employment) காட்டுகிறது?

(1) **M.** (2) **N.** (3) **P.** (4) **S.**

**1.5** ஒரு பொருளின் கூடுதல் அலகொன்றை நுகர்வதன் மூலம் ஒரு நபர் பெறுகின்ற மேலதிக திருப்தி:

(1) மொத்தப் பயன் (2) எல்லைப் பயன்

(3) சராசரிப் பயன் (4) ஒப்புமை (Ordinal) பயன்.

**1.6** பின்வருவனவற்றுள் எது நிரம்பல் வளையி வலப் பக்கமாக நகர்வதற்கான ஒரு காரணம் **அல்ல**?

(1) தொழினுட்ப முன்னேற்றம்

(2) சந்தையில் வழங்குநர்களின் எண்ணிக்கை அதிகரித்தல்

(3) உற்பத்தியில் பயன்படுத்தப்படும் காரணி உள்ளீடுகளின் (factor inputs) விலை அதிகரிப்பு

(4) உற்பத்தியாளர்கள் மீது அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட வரி நீக்கப்படுதல்.

**1.7** இரண்டு பொருள்களுக்கு இடையேயான குறுக்கு விலை நெகிழ்ச்சியின் குணகம் எதிர்மறையாக இருந்தால், அவ்விரு பொருள்களும்:

(1) நிரப்புப் (complementary) பொருள்கள் (2) பிரதியீட்டுப் (substitute) பொருள்கள்

(3) சாதாரண (normal) பொருள்கள் (4) தரங்குறைந்த (inferior) பொருள்கள்

**1.8** பின்வருவனவற்றில் எது தனியுரிமைச் (monopolistic) சந்தையின் ஒரு பண்பாகும் (characteristic)?

(1) கட்டற்ற நுழைவும் வெளியேறுகையும்

(2) விலை நிர்ணயம் செய்பவர்

(3) சந்தையில் அதிக கொள்வனவாளர்களும் விற்பனையாளர்களும் காணப்படுதல்

(4) ஒரே மாதிரியான (homogeneous) பொருள்களின் உற்பத்தி.

**1.9** பின்வருவனவற்றில் பொருளாதார இலாபத்தில் உள்ளடக்கப்படுகின்ற ஆனால் கணக்கீட்டு இலாபத்தில் உள்ளடக்கப்படாத கிரயம் எது?

(1) பணியாளர்களுக்குச் செலுத்திய கூலிகள்

(2) தொழிற்சாலைக் கட்டடத்திற்காகச் செலுத்திய வாடகை

(3) மூலப் பொருள்களின் கிரயம்

(4) பொருளாதாரத் தேய்மானம்

**1.10** பொதுமக்களால் வைத்திருக்கப்படும் நாணயம், வர்த்தக வங்கிகளில் பொதுமக்கள் வைத்திருக்கும் கேள்வி வைப்புகள் மற்றும் வர்த்தக வங்கிகளில் பொதுமக்கள் வைத்திருக்கும் கால மற்றும் சேமிப்பு வைப்புகள் ஆகியவற்றின் மொத்தம் (aggregate) எவ்வாறு அறியப்படுகின்றன?

(1) குறுகிய பண நிரம்பல்
(2) விரிந்த பண நிரம்பல்
(3) ஒன்றித்த விரிந்த பண நிரம்பல்
(4) அடிப்படை பண நிரம்பல்

*இல. **1.11** மற்றும் **1.12** ஆகிய வினாக்களிலுள்ள இடைவெளிகளை நிரப்புவதற்குச் சரியான சொல் / சொற்களை அடைப்புக்குள்ளிருந்து தெரிவுசெய்க. தெரிவு செய்யப்பட்ட சொல் / சொற்களை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப்புத்தகத்தில் எழுதுக*

**1.11** நீண்ட காலத்தில், தனியுரிமைப் போட்டியிலுள்ள நிறுவனங்கள்................. *(சாதாரண (பூச்சிய)/ சாதாரணத்திற்கும் அதிகமான)* பொருளாதார இலாபத்தை ஈட்டுகின்றன.

**1.12** உள்ளீட்டின் விகிதாசார அதிகரிப்பு வெளியீட்டின் விகிதாசார அதிகரிப்பை விடக் குறைவாக இருக்கும்போது, அங்கு ................. *(அதிகரித்துச் செல்கின்ற/ குறைந்து செல்கின்ற)* அளவுத்திட்ட விளைவுகள் காணப்படும்.

*கீழே **1.13** மற்றும் **1.14** இல் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** எனக் குறிப்பிடுக. உமது விடையை (சரியானது / தவறானது) உரிய வினா இலக்கத்துடன் விடைப் புத்தகத்தில் எழுதுக*

**1.13** கடன்களுக்கான உயர்ந்தபட்ச முதிர்வுக் காலத்தை அமைப்பது, இலங்கை மத்திய வங்கியால் பயன்படுத்தப்படும் நாணயக் கொள்கையின் அளவுசார் கருவிக்கான ஓர் உதாரணமாகும்.

**1.14** குறுங்கால உற்பத்திச் செயன்முறையில், சராசரி மொத்தக் கிரய (ATC) வளையியின் குறைந்தபட்சப் புள்ளியில், எல்லைக் கிரயமானது (MC) சராசரி மொத்தக் கிரயத்திற்குச் சமமாக இருக்கும்.

***1.15** தொடக்கம் **1.20** வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை உங்களது விடைப்புத்தகத்திலே உரிய வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதுக.*

**1.15** சந்தர்ப்பச் செலவு (opportunity cost) என்பதாற் கருதப்படுவது யாதெனச் சுருக்கமாக விவரிக்க.

**1.16** கேள்வி விதியிலுள்ள "பதிலீட்டு விளைவு (Substitution Effect)" என்பதைச் சுருக்கமாக விவரிக்க.

**1.17** பொருளாதார வளர்ச்சியைத் தீர்மானிப்பவைகள் (determinants) இரண்டைக் (02) குறிப்பிடுக.

**1.18** தேவைகள் மற்றும் விருப்பங்களுக்கிடையிலான இரண்டு (02) வேறுபாடுகளைக் குறிப்பிடுக.

**1.19** கேள்வி வளையியை இடப் பக்கமாக நகர்த்துகின்ற இரண்டு (02) காரணிகளைக் குறிப்பிடுக.

**1.20** "பொருளாதார அபிவிருத்தி" என்பதாற் கருதப்படுவது யாதெனச் சுருக்கமாக விவரிக்க.

(02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A நிறைவு*

## பகுதி B

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 02

(a) பொருளாதாரப் பொருள்களின் மூன்று (03) பண்புகளைக் (characteristics) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) ஒரு பொருளாதாரத்திலுள்ள மூன்று (03) அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(c) ஒரு நிறைபோட்டி நிறுவனம் குறுகிய காலத்தில் இலாபத்தை எவ்வாறு உச்சப்படுத்துகிறது என்பதை வரைபு ஒன்றைப் பயன்படுத்தி **விவரிக்க.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 03

(a) "நிரம்பல் விதி (law of supply) என்பதாற் கருதப்படுவது யாதென **விவரிக்க.** (03 புள்ளிகள்)

(b) பண்டமொன்று தொடர்பான பின்வரும் கேள்விச் (Qd) சார்பு மற்றும் நிரம்பல் (Qs) சார்பு ஆகிய வற்றைக் கவனத்திற் கொள்க:

$$Q_d = 180 - 3p$$

$$Q_s = 20 + 2p$$

**நீங்கள் செய்ய வேண்டியது :**

பண்டத்தின் சந்தைச் சமநிலை விலை மற்றும் கணியத்தைக் (quantity) **கணிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(c) அரசாங்கத்தால் ஒரு பண்டத்திற்கு அதிகபட்ச விலை விதிக்கப்படுவதால் ஏற்படும் விளைவுகளை (consequences) **விவரிக்க.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 04

(a) இலங்கை மத்திய வங்கியின் மூன்று (03) பணிகளைப் (functions) **பட்டியலிடுக.** (03 புள்ளிகள்)

(b) பணத்திற்கான தேவைக்கான **மூன்று** (03) நோக்கங்களைக் (motives) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(c) பணவீக்கத்திற்கான இரண்டு (02) காரணங்களை **விவரிக்க.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 05

(a) சர்வதேச வர்த்தகத்தின் மூன்று (03) அனுகூலங்களைக் (advantages) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) சென்மதி நிலுவையில் (balance of payment) பதிவு செய்யப்படும் மூன்று (03) வகையான பரிவர்த்தனைகளைப் **பட்டியலிடுக.** (03 புள்ளிகள்)

(c) 2026 பெப்ரவரி தொடக்கம் மத்திய கிழக்கில் ஒரு தொடர்ச்சியான மோதல் / போர் இருந்து வருகிறது. இது உலகளாவிய பொருளாதாரத்தைப் பாதித்துள்ளது.

மத்திய கிழக்கு மோதல்/ போர் இலங்கைப் பொருளாதாரத்தைப் பாதிக்கின்ற இரண்டு (02) வழிகளை (ways) **விவரிக்க.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

(மொத்தம் 20 புள்ளிகள்)

## வினா 06

(A) ஒரு வருட காலத்திற்கான பொருளாதாரமொன்றின் தேசிய கணக்குகள் தொடர்பான பின்வரும் அனுமானத் தரவுகள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன:

| | ரூ. மில்லியன் |
|---|---|
| தனியார் நுகர்வுச் செலவினம் | 52,000 |
| அரசாங்க நுகர்வுச் செலவினம் | 12,500 |
| மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம் | 11,000 |
| இருப்புகள் மற்றும் பெறுமதிகளில் உள்ள மாற்றங்கள் | 7,500 |
| பொருள்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதிகள் | 4,400 |
| பொருள்கள் மற்றும் சேவைகளின் இறக்குமதிகள் | 3,800 |
| வெளிநாட்டு நிகர முதன்மை வருமானம் | 6,425 |

***நீங்கள் செய்ய வேண்டியவை :***

*செலவின அணுகுமுறையைப் பயன்படுத்தி பின்வருவனவற்றைக் **கணிக்க:***

(a) மொத்த உள்நாட்டுச் செலவினம் (GDE) – சந்தை விலையில் (05 புள்ளிகள்)

(b) மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) – சந்தை விலையில் (03 புள்ளிகள்)

(c) மொத்த தேசிய வருமானம் (GNI) – சந்தை விலையில். (02 புள்ளிகள்)

(B) வணிகச் சுழற்சியில் (business cycle) உள்ள நான்கு (04) கட்டங்களைப் (phases) **பட்டியலிடுக.**
(02 புள்ளிகள்)

(C) தேசிய வருமானக் கணக்குகளின் மூன்று (03) வரையறைகளைக் (limitations) **குறிப்பிடுக**.
(03 புள்ளிகள்)

(D) நாட்டின் நிதிக் கொள்கையால் வணிகங்கள் மீது ஏற்படுகின்ற இரண்டு (02) தாக்கங்களை (impacts) **விவரிக்க.** (03 புள்ளிகள்)

(E) சந்தைப் பொருளாதாரத்தில் அரசாங்கத்தின் இரண்டு (02) வகிபாகங்களைக் (roles) **குறிப்பிடுக.**
(02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

